## Court of the District Munsif cum Judicial Magistrate No.I, Usilampatti.

| | | | | |
|---|---|---|---|---|
| **Case No.** | : | **CC . 63/2019** | | |
| **PW/DW/CW** | : | **PW3** | | |
| **Name** | : வள்ளிநாயகம் | | **Caste** | : |
| **Father's/ Husband's Name** | : லட்சுமணன் | | **Calling** | : |
| **Village** | : | | **Religion** | : |
| **Taluk** | : | | **Age** | : |

( Accused absent u/s.317 CrPC petition filed and allowed)

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of **15.04.2024**

---

**முதல் விசாரணை:**

நான் ராஜபாளையம் சம்சியாபுரத்தில் குடியிருந்து வருகிறேன். புகார்தாரர் மற்றும் அவரது கணவர் எங்கள் ஊர்காரர்கள். சாட்சி தேவகுரு எனது ஊர்காரர் ஆவார். விபத்தில் இறந்துபோன கந்தவேல் புகார்தாரரின் கணவர் ஆவார். எங்கள் ஊரில் இருந்து பழனி பாத யாத்திரைக்காக நானும் மேற்சொன்ன கந்தவேல் மற்றும் தேவகுரு ஆகியோர் ஊர்காரர் சில பேருடன் புறப்பட்டு சென்றோம். அப்போது நாங்கள் புறப்பட்டு சென்ற இரண்டாவது நாளான 14.01.2019 ம் தேதி எங்களுடன் வந்த ஊர்காரர்கள் உசிலம்பட்டி - பேரையூர் ரோட்டில் எங்களுக்கு முன்பு சென்றுவிட்டார்கள். நானும் தேவகுருவும் முன்பு சென்று கொண்டிருந்தபோது எங்களுக்கு பின்னால் கந்தவேலு வந்து கொண்டிருந்தார். ரோட்டின் தெற்கு பக்கம் இடது ஓரமாக நாங்கள் நடந்து சென்று கொண்டிருந்தோம். அப்போது பேரையூர்தாண்டி ரவுண்டான தண்ணீர் தொட்டி அருகே ரோட்டின் ஓரமாக எங்களுக்கு பின்னால் 10 அடி தொலைவில் வந்து கொண்டிருந்த கந்தவேல் மீது எங்களுக்கு பின்னால் வந்த அரசு பேருந்து மோதிவிட்டது. நாங்கள் டம் என்ற சத்தம் கேட்டு பின்னால் திரும்பி பார்த்த போது பேருந்து அவர் மீது மோதியிருந்தது. கந்தவேலுக்கு கை, கால், தலையில் அடிபட்டு பேச்சு மூச்சு இல்லாமல் இருந்தார். பேருந்து ஓட்டுநர் இறங்கி வந்து பார்த்து அவரது உதவியுடன் அதே பேருந்தில் நாங்கள் உசிலம்பட்டி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு சென்றோம். பேருந்து ஓட்டுநரை பார்த்தால் என்னால் அடையாளம் காட்டமுடியும். நான் கந்தவேல் மனைவிக்கு போன் மூலமாக தகவல் சொன்னேன். கந்தவேலுவை

மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். அவர் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை** :

உசிலம்பட்டி அரசு மருத்துவமனைக்கு காயம்பட்டவரை அதே பேருந்தில் ஓட்டுநரும் நடத்துனர் மட்டும் தான் சிகிச்சைக்காக அழைத்து வந்தார்கள் என்றால் சரியல்ல நாங்களும் உடன் வந்தோம். இறந்த கந்தவேல் இரண்டு நாட்களாக நடந்து வந்ததால் அவராகவே தடுமாறி பேருந்தில் விழுந்துவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. நானும் தேவகுருவும் சம்பவ இடத்தில் இல்லை என்றும் இறந்த நபரை ஓட்டுநர், மற்றும் நடத்துனர் மட்டுமே சேர்த்தார் என்றும் அதன்பின்பு தான் நாங்கள் மருத்துவமனை சென்றோம் என்றும் இறந்த நபருக்கு இழப்பீடு பெற்றுதருவதற்காக பொய்யாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. கந்தவேலை மதுரை அரசு மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் மூலம் அனுப்பி வைத்த பின்பு நாங்கள் பாத யாத்திரை சென்றோம் என்று சொன்னால் சரிதான்.

S.d./Vallinayakam
Taken down be me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.
/Sd.. S.Maharajan
District Munsif cum Judicial Magistrate No.I,Usilampatti.